<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>அ.வ.எண். 266/2022</u>
<u>நாள்.29.10.2024</u>

2024 ம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55 வது விதியின் 9 வது ஏற்பாட்டின்படி) திருமதி. P. சந்தோஷம், இளநிலை உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==========================================================

| | |
|---|---|
| பெயர் = விஜயலெட்சுமி | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| சாதி = | சமயம் = |
| தொழில் = | வயது = |

==========================================================

<u>**PW 1 மு.வி**</u>

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தாவா சொத்தை பொறுத்து வாதியின் தகப்பனார் கூத்தன் பெயரில் ஏற்பட்ட கணினி பட்டா (எண்.1175) சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1, 05.10.2021 தேதியிட்ட கூத்தன் என்பவரின் வாரிசு சான்றிதழ் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.2, 04.03.2004 தேதியிட்ட ஈட்டுக்கடன் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3, 01.03.2022 தேதியிட்ட நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.4, மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.5, 30.05.2017 தேதியிட்ட கூத்தன் என்பவரின்

இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6, தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனார் பெயரில் ஏற்பட்ட பட்டா (எண்.1344) பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகும்.

(வழக்கு குறுக்கு விசாரணைக்காக 12.11.2024 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)